# சிறார்களின் உரிமைகள்

## ஒரு கையேடு




S·I·V·A

CHILD LINE 1098 NIGHT & DAY

சிறார் பாதுகாப்பை வேண்டி வெளியிட்டவர் :


**சிவா அறக்கட்டளை**

மெயின் ரோடு, திருமலாபுரம்
பனவடலி சத்திரம் அஞ்சல்
சங்கரன் கோவில் தாலுகா
திருநெல்வேலி மாவட்டம்
தொலைபேசி : **+91-4636-270116**
மின்னஞ்சல் : **sivatrust.tpuram@gmail.com**
இணையதளம் : **www.sivatrust.org**



வெளியீட்டு உதவி :

terre des hommes netherlands

## சிறார் என்பது எவரைக் குறிக்கிறது?



இந்திய அரசியல் சாசனம் 18 வயதுக்கு கீழுள்ள அனைவரையும் சிறாராக குறிப்பிட்டு, அவர்களது உரிமைகளை அங்கீகரிக்கிறது.

## சிறார்களின் உரிமைகள் யாவை?

- அவர்களின் பெற்றோர், குடும்பத்தினர் மற்றும் காப்பாளரிடமிருந்து அனைத்துவகை கவனங்களும் பெற உரிமை.
- ஆரோக்கியமாக வாழ்வதற்கு தேவையான உணவைப் பெறும் உரிமை.
- உடல்நலம் கெடும்போது சிறந்த மருத்துவ உதவி பெற உரிமை.
- தங்களுக்கு ஏற்படும் தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்படவும், பயமின்றி வாழவும், பாதுகாப்பான உறைவிடம் பெறவும் உரிமை.
- கல்வி பெற உரிமை.
- உடல் ஊனமுற்ற சிறார் தனிக்கவனம் பெற உரிமை.
- தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தவும், அவை கேட்கப்படவும் உரிமை.
- தங்களை காயப்படுத்துபவர், பெற்றோரே ஆனாலும், அவர்களிடமிருந்து பாதுகாப்பு பெற, காவல் துறை உள்ளிட்ட, சம்பந்தப்பட்ட அனைத்து அரசு நிறுவனங்களையும் நடவடிக்கை எடுக்கவைக்கும் உரிமை.
- அனைத்துவகை உடல்ரீதியான, மனரீதியான வன்முறைகள், காயம் மற்றும் இழிநிலையிலிருந்து பாதுகாக்கப்பட அரசு உதவி கோரும் உரிமை.
- சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டாலும் தனிக் கவனம் பெறும் உரிமை.
- போர்க்கால சூழ்நிலைகளில் சிறப்பாக பாதுகாக்கப்பட உரிமை.
- பெற்றோர் மற்றும் காப்பாளரிடமிருந்து, புறக்கணிக்கப்படுதல், இழிவுபடுத்தப் படுதல், தண்டனை பெறுதல் போன்ற தீங்குகளிலிருந்து உரிய பாதுகாப்பு பெற உரிமை.

- விளையாட்டில் பங்கு பெறவும், வளர்ந்தவர் செய்யவேண்டிய வேலைகளை தான் செய்யாதிருக்கவும் உரிமை.
- குழந்தைத் தொழிலாளர் முறையிலிருந்தும், மற்றவர் வருமானத்திற்காக கட்டாய வேலை செய்வதிலிருந்தும் பாதுகாக்கப்பட உரிமை.
- அனைத்துவகை பாலியல் பலாத்காரங்கள், இழிவுகளிலிருந்து பாதுகாக்கப்பட உரிமை.
- உடலுக்கு ஊறு விளைவிக்கும் போதைப் பொருள்களிலிருந்து பாதுகாக்கப்பட உரிமை. அத்தகைய போதைப் பொருட்களின் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபடுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படும் உரிமை.

## குழந்தைகள் எவ்வகையில் பாழாக்கப்படுகிறார்கள் ?

### பாலியல் கொடுமைகள்

- வயதுவந்தவர்கள் வலுக்கட்டாயமாக, தொடக்கூடாத இடங்களில் தொடச்செய்வது
- ஆபாசப் படங்களை காட்டுதல்
- முறையற்ற வகையில், சிறார் விரும்பாத இடங்களில் அவர்களை தொடுதல் மற்றும் பாலியல் வன்முறையில் ஈடுபடுதல்

### உடல்ரீதியான கொடுமைகள்

- அடித்தல், காயப்படுத்தல், வயதுவந்தவர் தன் வெறுப்பை சிறார்மீது காட்டுதல்

### மனரீதியான கொடுமைகள்

- அவமானப்படுத்தல், பயப்படுத்தல், திட்டுதல்

### புறக்கணிப்பு

- உரிய கவனம் செலுத்தாதிருத்தல். உதாரணமாக, சிறாரை சுத்தப்படுத்தல், ஆடை அணிவித்தல், உணவளித்தல் ஆகியவற்றை சரியாக செய்யாதிருத்தல்.

**ஒரு குற்றம் நடந்துவிட்டதற்கான அறிகுறிகள் ஓரிடத்தில் தென்பட்டால், அது உடனடியாக காவல்துறைக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும்.**

## கவனிக்கப்படவும், பாதுகாப்பாக இருப்பதற்குமான உரிமை



- பெரும்பாலான நேரங்களில் தனக்கு எதிரான செயல்களை செய்பவரை சிறார் அறிந்திருப்பார்கள். அவர்களை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்டவர்களே, தங்கள் பொறுப்புக்கு துரோகம் செய்து, சிறாருக்கு தீங்கு இழைப்பவர்களாக இருப்பார்கள். அவர்கள் சிறாரின் பெற்றோராகவோ, குடும்பத்தினராகவோ, நண்பர்களாகவோ, அண்டை வீட்டவர்களாகவோ கூட இருக்கலாம்.
- வார இறுதிகளில், விடுமுறை நாட்களில், சிறார் அவர்களது வீடுகளில் தனியாக இருக்கும்போது இத்தகைய ஆபத்துகளுக்கு உள்ளாவதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு.
- பெற்றோரும், காப்பாளர்களும் தங்கள் குழந்தைகள் எங்கு, யாருடன் இருக்கிறார்கள் என்பதை எப்போதும் அறிந்து வைத்திருக்கவேண்டும்.
- பெற்றோரும், காப்பாளர்களும் தங்கள் குழந்தைகளின் அதிகபட்ச நன்மையை கருத்தில் கொண்டே எப்போதும் செயல்படவேண்டும்.
- சிறார் பாதுகாப்பு என்பது வீட்டிலிருந்து, குடும்பத்திலிருந்துதான் தொடங்குகிறது.

## சிறார் பாதுகாப்பு நடைமுறைகள்

**யாராவது ஒருவர் நீ சொல்வதை உணர்ந்து உன்னைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கும்வரை உனக்கு நடந்ததை மற்றவரிடம் சொல்லிக்கொண்டேயிரு.**

### யாரிடமாவது கூறு



- நீ பயமுறுத்தப்படுவதாக நினைத்தால், உன் நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் அதைப்பற்றி சொல்.
- உனக்கு ஏற்பட்ட தீங்கு உனக்கும், தீங்கு இழைத்தவருக்கும் மட்டுமே தெரிந்த இரகசியமாக இருக்கக்கூடாது.
- உன்னை யாராவது கொடுமைக்கு உள்ளாக்கினால், அவரைப் பாதுகாக்க நினைக்காமல், உன்னை பாதுகாத்துக்கொள்ள நினை. அதைப் பற்றி பிறரிடமும் கூறு.
- நீ சொல்வதை ஒருவர் நம்பவில்லையென்றால், மற்றொருவரிடம் கூறு. ஏதேனும் மருத்துவமனைக்குச் சென்று அங்குள்ள பணியாளரிடம் கூறு. அவர் நிச்சயம் நடவடிக்கை எடுப்பார். நீ அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் செய்யலாம். அல்லது நீ நம்பும் ஆசிரியரிடம் கூறி, அவர் மூலம் உதவிபெற்று புகார் செய்யலாம்.
- நீ குழந்தைகள் உதவி தொலைபேசி எண் 1098க்கும் நேரடியாக தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம்.

**விழிப்புணர்வு பெற்ற சிறார் நன்கு பாதுகாக்கப்பட்டவராகவும் இருப்பார்**

## புரிந்து கொள் – பாதுகாப்பாய் இரு



- சிறாருக்கான உரிமைகள் எவையெவை என்று தெரிந்துகொள்.
- நீ தவறென்று நினைப்பதை யார் செய்தாலும், சொன்னாலும் (அவர் உனது பெற்றோராய் இருந்தாலும்) அதை தவறு என்று சொல்வதற்கான உரிமை உனக்கு இருக்கிறது. உன்னை சங்கடப்படுத்தும் விதத்தில் ஏதாவது செய்ய முன்வந்தாலும் அல்லது உனக்கு விருப்பமில்லாமல் உன்னை தொட்டாலும், அதையும் தவறு என்று புறக்கணிக்க உனக்கு உரிமை உண்டு.
- பாலுறவு, எய்ட்ஸ் நோய், குழந்தை எப்படி பிறக்கிறது, பாலின ரீதியான, உணர்வு ரீதியான, உடல் ரீதியான தீங்குகள் போன்ற உனக்கு புரியாத விஷயங்களைப் பற்றி படித்து அறிந்து கொள். அவை சம்பந்தமான கேள்விகளைக் கேட்டு பதில் அறிந்து கொள்வதில் நீ பயமோ, வெட்கமோ படவேண்டியதில்லை. உனது பெற்றோரிடமோ, ஆசிரியரிடமோ, நீ நம்பிக்கை வைத்துள்ள வேறு பெரியவர்களிடமோ அத்தகைய சந்தேகங்களைக் கேட்டு தெளிவு பெறலாம். அல்லது குழந்தைகளுக்கான உதவி எண் 1098ஐத் தொடர்பு கொள்ளலாம்.

**நினைவில் வை. குழந்தைகளுக்கு ஏற்படும் தீமைகள் ஒருபோதும் குழந்தைகளின் தவறினால் இருக்கமுடியாது.**

## உன்னை நேசி

- உனது உடலை போற்றிப் பாதுகாத்துக் கொள். உனது ஆயுட்காலம்வரை அது உனக்கே உரிமையானது.
- உன்னையும், மற்றவர்களையும் மதித்து நட.

- நீ ஒரு தனிப்பிறவி. உனது வாழ்வின் மதிப்பை உணர்ந்து கொள். தைரியமாக இரு
- ஆணோ – பெண்ணோ, வசதி படைத்தவரோ – ஏழையோ, ஒல்லியோ – குண்டோ, உயரமோ – குள்ளமோ –- முழு நம்பிக்கையுடன் உன் வாழ்வை நடத்திச் செல்.
- உனது கொள்கைகளில் உறுதியாக நில். உனது நண்பர்களிடமிருந்தோ, வேறு எவரிடமிருந்தோ வரும் எத்தகைய அழுத்தங்களுக்காகவும் உனது நிலையை மாற்றிக் கொள்ளாதே.
- நீ எந்த எல்லைவரை செல்ல முடியும் என்பதை புரிந்து கொள். அதேபோல் மற்றவர்களின் எல்லைக்கும் மதிப்பு கொடு.
- சிறுவனே, சிறுமியே, உன்னைத் தற்காத்துக் கொள்வதோடு, சரியானவற்றை மற்றவர்களுடன் கைகோர்த்து ஆதரியுங்கள்.
- உனக்கு தீங்கிழைக்கப்பட்டால் அது எப்போதும் உனது குற்றமாகாது. நீ மற்றவர்களிடம் அதைப்பற்றி கூறாமல் இருந்தால், தீங்கிழைப்பவர்கள் உன்மீது குற்றத்தை சுமத்த முயற்சிக்கலாம்.

**நீ பாதிக்கப்பட்ட சிறுவராய் இருந்தால் அல்லது சிறார் ஒருவர் பாதிக்கப்பட்டதாக நீ சந்தேகப்பட்டால், உடனே நீ உதவி நாடவேண்டிய தொலைபேசி எண்கள்:–**

**சைல்டுலைன் : 1098**

**காவல்துறை : 100**

CHILD LINE 1098 NIGHT & DAY

## நினைவு கொள்ளுங்கள். குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பது அனைத்து மக்களின் கடமையாகும்!

# குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள்

## தமிழ்நாடு அரசின்
## குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள்

**1. சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்**

- தற்சமயம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கும் ரூ. 22,000லிருந்து ரூ. 50,000 ஆக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் குழந்தை பிறந்தபின் பெற்றோர்களில் எவரேனும் ஒருவர் குடும்பக்கட்டுப்பாடு செய்திருத்தல் வேண்டும். இந்த தொகையானது கையில் வழங்கப்படமாட்டாது. உரிய வங்கியில் செலுத்தப்பட்டுவிடும்.

**2. ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் (ICPS)**

- சமூகநலத்துறை மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் குழந்தைகள் மேம்பாட்டுக்காகவும், அபாயகரமான சூழலில் இருக்கும் குழந்தைகளின் சிகிச்சை மற்றும் மறுவாழ்வுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் திட்டங்கள்:

  1) குழந்தைகள் பாதுகாப்பு இல்லம்

  2) குழந்தைகள் கூர்நோக்கு இல்லம்

  3) குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் கவனிப்பு மையம்

**3. ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து மையம்**

**4. மாணவர்களுக்கான நலத்திட்டங்கள்**

அ) இலவச பாடம் மற்றும் நோட்டுப்புத்தகம் விநியோகித்தல் — 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை உள்ள மாணவ மாணவிகள் இதன் மூலம் பயனடைந்து வருகிறார்கள்.

ஆ) இலவச இரண்டு சக்கர மிதிவண்டி – அரசு, அரசின் முழு / பகுதி அளவில் உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 11வது வகுப்பு மாணவ, மாணவிகள் பயனடைகிறார்கள்.

இ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இலவச மதிய உணவுத் திட்டம்

ஈ) இலவச சீருடைத் திட்டம் – அரசு, அரசின் முழு / பகுதி அளவில் உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இரண்டு ஜோடி இலவச சீருடை, காலணியும் வழங்கப்பட்டு வருகிறது.

உ) இலவச பஸ் பாஸ் – அனைத்து மாணவ மாணவிகளுக்கும் பள்ளிக்குச் செல்ல இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டு வருகிறது.

## 5. முதல் மூன்று மாணவர்களுக்கான ரொக்கப்பரிசு

அ) **மேல்நிலைக்கல்வி** – உயர் படிப்பினை ஊக்குவிக்கும் விதமாக, மேல்நிலைப் படிப்பில் தமிழினை முதல்மொழியாகக் கொண்டு அதிக மதிப்பெண் பெறும் முதல் மூன்று மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் வாயிலாக ரொக்கப்பரிசு வழங்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

- ✧ முதல் பரிசு – ரொக்கம் ரூ.50,000
- ✧ இரண்டாம் பரிசு – ரொக்கம் ரூ.30,000
- ✧ மூன்றாம் பரிசு – ரொக்கம் ரூ.20,000

தொடர்ந்து மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கும் அவர்களின் படிப்பு செலவினை அரசே ஏற்றுக்கொள்கிறது.

(1) அரசு பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள் – 1

(2) அரசு உதவி பெறும் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள் – 1

(3) ஆங்கிலோ–இந்தியன் / சுயநிதி மேல்நிலைப்பள்ளி – 1

**ஆ) பத்தாம் வகுப்பில் –** அதுபோல உயர்நிலைப் பள்ளியில் தமிழினை முதல்மொழியாகக்கொண்டு அதிக மதிப்பெண் பெறும் முதல் மூன்று மாணவ, மாணவிகளுக்கு ரொக்கப்பரிசு வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

- ✧ முதல் பரிசு – ரூ.25,000
- ✧ இரண்டாம் பரிசு – ரூ.20,000
- ✧ மூன்றாம் பரிசு – ரூ.15,000

இத்துடன், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவ, மாணவிகளின் உயர்படிப்பிற்கான செலவையும் அரசே வழங்கிவருகிறது. மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பினில் தமிழை முதல் மொழியாகக்கொண்டு அதிக அளவில் மதிப்பெண் எடுத்து, தொடர்ந்து படிக்க உள்ள மாணவர்களுக்கு ரூ.1,500 வழங்கப்பட்டு வருகிறது.

**இ) சிறப்பு உதவி திட்டம்**

மேலும், பாடவாரியாக மாநில அளவில் பத்தாம், பனிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுப்பவர்களுக்கு ரொக்கப்பரிசும் வழங்கப்படுகிறது.

**ஈ) பெண் குழந்தைகளுக்கான கல்வி உதவித் திட்டம்**

தாழ்த்தப்பட்ட, மலைவாழ் இனத்தினை சேர்ந்த பெண் குழந்தைகள் பள்ளி இடைவிலகலை தடுத்து, தொடர்ந்து படிக்க வசதியாக திருமணம் ஆகாத, 16 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ரூ.3,000 டெபாசிட் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

தாயோ அல்லது தந்தையோ விபத்தில் மரணமடைந்தாலோ, அல்லது முழுவதுமாக உழைக்கும் திறன் இழந்துவிட்டாலோ அரசின் மூலம் அந்த மாணவர்களின் தொடர்கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

அந்நிலையிலுள்ள மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதை உறுதிப்படுத்தும் விதமாக வகுப்பு 6 முதல் 12 வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் படிக்க ரூ.50,000 குறிப்பிட்ட மாணவரின் பெயரில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் டெபாசிட் செய்யப்பட்டு வருகிறது.

உ) **பள்ளி இடைவிலகலை குறைப்பதற்கான சிறப்புத் திட்டம்** – பத்து மற்றும் 11–ல் இடைவிலகலைத் தடுக்க ரூ.1,500ம், அதுபோல 12–லிருந்து இடைவிலகலைத் தடுக்க ரூ.2,000–ம் அரசு வழங்குகிறது.

## மத்திய அரசின் குழந்தைகளுக்கான நலத் திட்டங்கள்

1. தீனதயாள் ஊனமுற்றோர் மறுவாழ்வு மேம்பாட்டுத் திட்டம், 2003
2. ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து திட்டம், 1975 – 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய் இதன்மூலம் பயன்பெறுவர்
3. ஜனனி சுரக்ஷா யோஜ்னா, 2005 – கர்ப்பமுற்ற தாய்மார்களுக்கு ஒரு முறை நிதி உதவி வழங்கும் திட்டம்
4. கஸ்தூரிபா காந்தி பால வித்யாலயா, 2004 – தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் கல்வியில் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் கல்விக்காக உள்ள திட்டம்
5. கிஷோர் வைக்யானிக் ப்ரோக்ஷன் யோஜ்னா, 1999 – அறிவியல், மருத்துவம், பொறியியல் படிப்பில் ஆராய்ச்சி படிப்பு படிப்பவர்களை ஊக்குவிக்க உள்ள திட்டம்
6. பள்ளியில் உள்ள குழந்தைகளுக்கான இலவச மதிய உணவுத்திட்டம், 1995

7. தேசிய கல்வித் திட்டம் –– 15 முதல் 35 வயதுள்ள அனைவரும் கல்வி கற்க வேண்டும்

8. சப்லா அல்லது ராஜீவ் காந்தி வளரிளம் பருவ பெண்கள் மேம்பாட்டுத் திட்டம்

9. உடிசா – குழந்தை பராமரிப்பு பணியாளர்களுக்கான பயிற்சி திட்டம்

10. சர்வ சிக்ஷா அபியான் –– அனைவருக்கும் கட்டாய தொடக்க கல்வி திட்டம்

## குழந்தைகளுக்கான கொள்கைகள்

- இந்தியாவில் குழந்தை தொழிலாளர்கள் இல்லா நிலை ஏற்படுத்துதல்
- குழந்தைகளுக்கான தேசிய செயல் திட்டம், 2005
- தேசிய குழந்தை தொழிலாளர் கொள்கை, 1987
- தேசிய அளவிலான கல்வி கொள்கை
- தேசிய நலக் கொள்கை
- தேசிய சத்துணவு கொள்கை



## குழந்தைகள் தொடர்பான சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள்

- குழந்தை தொழிலாளர் தொடர்பாக அரசியல் சாசனத்தில் உள்ளவை
- கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம், 1976
- குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய ஆணைய சட்டம்
- குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய திருத்த சட்டம், 2006
- கட்டாயப்படுத்தி வேலைவாங்குதலை ஒழிக்கும் உடன்படிக்கை
- குழந்தைகளின் உரிமைகள் சம்பந்தமான உடன்படிக்கை
- நெறியற்ற உறவுகள் தடுப்பு சட்டம், 1956
- இளையோர் நீதி சட்டம், 2000
- இளையோர் நீதி திருத்த சட்டம், 2006
- குழந்தை திருமண தடுப்பு சட்டம், 2006
- ஊனமுற்றோருக்கான சட்டம், 1995
- தகவல் பெறும் உரிமை சட்டம், 2005
- குழந்தை தொழிலாளர் சட்டம், 1986
- இந்திய ஒப்பந்த முறை சட்டம், 1872
- காப்பாளர் மற்றும் குழந்தைகள் சட்டம், 1872
- தில்லி பள்ளிக் கல்வி சட்டம், 1973
- கோவா குழந்தைகள் சட்டம், 2003
- கல்விக்கான உரிமைச் சட்டம், 2009
- பாலியல் குற்றங்களிலிருந்து சிறார் பாதுகாப்பு சட்டம், 2012
- ஊனமுற்றோர் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கை, 2010

# குழந்தைகளின் பாதுகாப்பிற்கான குறிப்புகள்

- உனது முழுப் பெயர், உனது பெற்றோர்களின் பெயர்கள், உனது முகவரி மற்றும் தொலைபேசி எண்ணைத் தெரிந்து வைத்துக்கொள்.
- உன்னை பயப்படுத்தும், கவலையில் ஆழ்த்தும், தொந்தரவு படுத்தும் விஷயங்களை உன்னுடைய பெற்றோர்களிடம் தெரியப்படுத்து.
- ஒரு நல்ல இரகசியத்திற்கும், ஒரு கெட்ட இரகசியத்திற்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள். முன் அறிவிப்பின்றி கொடுக்கக்கூடிய ஒரு விருந்தைப் பற்றிய தகவல், விளையாட்டாய் வைத்திருக்கக் கூடிய ஒரு நல்ல இரகசியம். ஆனால், ஒரு கெட்ட இரகசியத்தை மனதில் வைத்துக்கொள்வது சங்கடத்தை ஏற்படுத்தும், உன்னை பயத்திலும் ஆழ்த்தும்.
- புதிய, அறிந்திராத ஆட்களிடம் ஒருபோதும் உன் பெயரையோ, முகவரியையோ கூறாதே.
- நண்பர்களோடு இணைந்து விளையாடுவதை வழக்கப்படுத்திக்கொள். வெளியிலும், பொது இடங்களிலும் தனியாக நடப்பதையோ, விளையாடுவதையோ தவிர்த்துவிடு.
- ஆபத்து வரும் நேரத்தில், மறைந்துகொள்வதைவிட, சத்தமிடுவதும், அங்கிருந்து ஓடுவதும் நல்ல பாதுகாப்பான வழிகள். அறிந்திராத ஒரு நபர் உன்னை அணுகினால், அவனுக்கு எதிராக சப்தமிட்டு, பாதுகாப்பு அளிக்கக்கூடிய பெரியவர்கள் இருக்குமிடத்திற்கு ஓடிச் சென்று, அவர்களிடம் அவனைப் பற்றி கூறவேண்டும்.
- புதியவர் பார்ப்பதற்கு நல்லவர்போல் தோன்றினாலும், அவரிடமிருந்தும், அவரது வாகனத்திலிருந்தும் பாதுகாப்பான தூரத்தில் (சுமார் 5 அடி விலகி) இருக்கவேண்டும்.

- புதியவரின் பிடியிலிருந்து தப்பிக்க ‘அபாயம்’, ‘காப்பாற்றுங்கள்’ என்று சப்தமிடுவதும், தகராறு செய்வதும் வேறு ஒரு பெரியவரின் கவனத்தை ஈர்க்க சிறந்த வழிகள்.
- வீட்டில் தனியாக இருக்க வேண்டிய சூழ்நிலையில், எல்லா கதவுகளையும், சன்னல்ளையும் மூடிவைக்க வேண்டும். வீட்டிற்கு திரும்பி வரும்போது கதவு திறந்து கிடந்தால் அல்லது சன்னல்கள் உடைக்கப்பட்டிருந்தால், உடனடியாக பக்கத்து வீட்டிற்கு சென்று, அவர்கள் உதவியுடன் சைல்டுலைன் **(1098)** அல்லது காவல்துறைக்கு **(100)** தகவல் கொடுக்கவேண்டும்.
- வீட்டில் தனியாக இருக்கும்போது, அழைப்பு மணி அடித்தால், ‘**யாா் அது?**’ என்று கேட்டு தெளிவுபெற வேண்டும். நீ தனியாக இருப்பதாக அவருக்கு தெரிவிக்கக் கூடாது. உன் பெற்றோர் அப்படி ஒருவர் வருவார், அவரை வீட்டில் இருக்கச் சொல் என்று கூறியிருந்தால் மட்டுமே கதவை திறக்கவேண்டும்.
- தொலைபேசியில் தெரியாதவர் எவரேனும் அழைத்தால், நீ வீட்டில் தனியாக இருப்பதை ஒருபோதும் தெரிவிக்காதே. ‘**அம்மாவோ, அப்பாவோ உடனடியாக போனில் பேசமுடியாது, ஏதேனும் தெரிவிக்க வேண்டியிருந்தால் என்னிடம் கூறலாம்**’ என்று தெரிவிக்கலாம்.
- செல் போன் வாங்கிக் கொடுக்கப்பட்டால், சங்கடமான குறுஞ்செய்தி வந்தால், உடனடியாக பெற்றோரிடம் கூறுங்கள்.
- கணினி உபயோகிப்பவர்கள் உங்களைப் பற்றிய விபரங்களை, புகைப்படத்தை எங்கும் தரவேண்டாம். தவறியும் ஆபாச பக்கங்களை நாடவேண்டாம்.



**பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டியவை:**

- அவர்களது முழுப் பெயர், வயது, தொலைபேசி எண், முகவரி
- ஆபத்து காலங்களில், உங்களையோ, வேறு நெருங்கிய உறவினரையோ, சைல்டுலைனையோ, காவல்துறையையோ எவ்வாறு தொடர்புகொள்வது என.
- குழந்தைகள் வீட்டில் தனியாக இருக்கும்போது போன் வந்தால், நீங்கள் வீட்டில்தான் இருப்பதாகவும், ஆனால் முக்கிய வேலையாய் இருப்பதால் போனில் பேசமுடியாது, எனவே பிறகு கூப்பிடுங்கள் என்று கூறும்படி பயிற்சி அளிக்கவேண்டும். புதிய நபர் போனில் தொடர்பு கொண்டால் பேச்சை சீக்கிரம் முடிக்கவும், அவர்கள் தொடர்ந்து பேச முயன்றால் போன் தொடர்பை துண்டிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டும்.
- குழந்தைகள் வீட்டில் தனியாக இருக்கும்போது யாராவது வந்தால், கதவை திறக்காமலேயே யார் வந்திருக்கிறார்கள் என்று அறியவேண்டும். அறிமுகமில்லாத நபரிடம் நீங்கள் வேலையாய் இருப்பதாகவும், எனவே பிறகு வந்தால் பார்க்கலாம் என்று சொல்ல பயிற்றுவிக்க வேண்டும். குழந்தைகள் புதிய நபருடன் பேச்சை தொடர்வதை தவிர்க்க வேண்டும். குழந்தைக்கு புதிய நபரைக்கண்டு பயம் உண்டானால், உடனடியாக அவசரகால போனுக்கு தொடர்புகொள்ளவும் பயிற்சி கொடுக்கவேண்டும். அத்தகைய அவசரகால போன் உங்களுடையதாகவோ, பெரும்பாலும் வீட்டிலிருக்கும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவருடையதாகவோ, அல்லது காவல்துறை எண்ணாகவோ இருக்கலாம்.
- உங்கள் குழந்தைகள், முடிந்தவரை மற்ற குழந்தைகளுடன் சேர்ந்தே விளையாடவோ, நடந்துசெல்லவோ வேண்டும்.
- உங்கள் குழந்தைகள் புதிவர்களிடமிருந்து எந்தப் பரிசையும் உங்கள் அனுமதி பெற்ற பிறகே வாங்கிக் கொள்ளவேண்டும்.

- அறிமுகமில்லாத ஒரு நபர் தனியாய் இருக்கும் உங்கள் குழந்தையை ஆளில்லாத ஒரு விளையாடுமிடம், பாழடைந்த கட்டிடம், பூங்கா அல்லது ஆற்றோரத்தில் உள்ள புதரான பகுதியில் நெருங்கக் கூடிய சூழ்நிலை ஏற்படாமல் தவிர்க்க வேண்டும். யாராவது உங்கள் குழந்தையை பின்தொடர்ந்தாலோ, அல்லது பயப்படுத்தினாலோ, அங்கிருந்து உடனடியாக உங்கள் வீட்டிற்கோ, அருகிலுள்ள பொது இடத்திற்கோ அல்லது நண்பரின் வீட்டிற்கோ ஓடி வந்துவிட அவர்களை பயிற்றுவிக்க வேண்டும்.
- பெரியவர்கள், அதிலும் புதியவர்கள், ஒரு இடத்திற்கு வழிகாட்டவோ, அல்லது ஒன்றைத் தேடவோ குழந்தைகளை பெரும்பாலும் நாடமாட்டார்கள் என்று அவர்களுக்கு கற்பிக்க வேண்டும். புதியவர்கள் என்றால், ஆண் – பெண் இருவரையுமே குறிக்கும் என்பதையும் குழந்தைகளுக்கு புரியவைக்க வேண்டும்.
- ஒரு பல மாடிக்கட்டிட கடையில் உங்கள் குழந்தை உங்களிடமிருந்து பிரிய நேர்ந்தால், நேரடியாக அந்தக் கடை பணியாளர் அல்லது பணம்பெறுபவரிடம் சென்று உதவி நாடும்படி கூறவேண்டும்.
- உங்கள் குழந்தைகள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் எங்கெங்கு இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்து வைத்திருக்கவேண்டும். அவர்களது நண்பர்கள் யார் யார், அவர்கள் எந்தெந்த இடங்களுக்கு, வீடுகளுக்கு செல்லக்கூடும் என உங்களுக்கு தெரிய வேண்டும்.
- எந்தவொரு வாகனத்திலும், அது ஓடிக்கொண்டிருந்தாலும், ஓடாமல் இருந்தாலும், அதில் உங்கள் குழந்தையை கவனிக்காமல் விட்டுவிடாதீர்கள்.
- உங்கள் குழந்தை சொல்வதை கேளுங்கள். யாருடனோ, அல்லது எங்கோ செல்ல விருப்பமில்லை என்று குழந்தை சொன்னால் அதை கவனமாக கேளுங்கள்.

- யாரோ ஒருவர் உங்கள் குழந்தைமீது அதிக அக்கறை காட்டினாலோ, பரிசுகள் கொடுக்க தொடங்கினாலோ, அதை கவனியுங்கள். அவர் யார் என்று உங்கள் குழந்தையிடம் கேளுங்கள். அவர் ஏன் அப்படி செய்கிறார் என்பதை கண்டறியுங்கள்.
- அவர்களுக்கு விருப்பமில்லாத முறையில், அல்லது அவர்களுக்கு அசௌகரியத்தையோ, குழப்பத்தையோ ஏற்படுத்தும் வண்ணம் எவரது செய்கையோ, தொடுதலோ இருந்தால், அதை ஒதுக்கித் தள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு என்பதையும், அத்தகைய சூழலிலிருந்து முடிந்தவரை விரைவாக விலகிச் செல்லவேண்டும் என்பதை அவர்களுக்கு கற்பிக்கவேண்டும். செல்லமுடியாத நிலையில், அந்த நபரை காலால் உதையவோ, அவரது செயலை தடுக்கும்வண்ணம் கத்திக் கூச்சலிடவோ, அல்லது 'இந்த நபர் எனது தந்தையோ, தாயோ, பாதுகாவலரோ அல்ல' என்று சத்திடமிடும்படி கற்பிக்கவேண்டும். அதன்பின் என்ன நடந்தது என்பதை உங்களிடம் உடனடியாக தெரிவிக்கவேண்டும்.
- உங்கள் குழந்தைகளின் நடவடிக்கைகளிலோ, சிந்தனைகளிலோ மாற்றங்கள் தெரிந்தால் அதை கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் மனம் திறந்து உங்களிடம் பேசவையுங்கள். அவர்கள் கூறுவதை கவனமாகக் கேட்பது எப்படி என்று கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகள் தங்களுடைய பிரச்சனைகளை உங்களிடம் கூறினால், அமைதியாக கேளுங்கள், ஆறுதல் வார்த்தைகள் கூறுங்கள், பாகுபாடற்று சிந்தியுங்கள். அவர்களது பிரச்சனைகளை தீர்க்க அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.
- உங்கள் குழந்தைகளின் பாதுகாப்புக்கு தேவையான அடிப்படை திறனுக்கான பயிற்சியை கொடுங்கள். ஒரு பூங்காவிற்கோ, அல்லது ஒரு பல மாடிக்கட்டிட கடைக்கோ நேரடி பயிற்சி பெற அவர்களை அழைத்துச் செல்லுங்கள். அங்கு உங்கள் முன்னிலையில், ஒய்வறைக்கு ஒரு நண்பருடன் சென்றோ, அல்லது உதவி தேவைப்படும்போது எவ்வாறு நல்ல ஒரு

பெரியவரை தேர்ந்தெடுத்து அணுகுவது என்ற பயிற்சி பெறட்டும். உங்கள் குழந்தைகள் தங்கள் பெயரை வெளிப்படுத்தும் உடையை பொது இடங்களில் அணியாமலும், பெயர் தாங்கிய பொருட்களை கையில் எடுத்துச் செல்லாமலும் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், அறிமுகமில்லாத நபர் சுலபமாக குழந்தையை அணுக அது உதவும்.

- உங்களுக்கு நம்பிக்கையானவர்கள் உங்கள் குழந்தையை அழைத்து வர, சரியான சங்கேத மொழிகளை ஏற்படுத்திக் கொண்டு, உங்கள் குழந்தைகளுக்கும் அவற்றை தெரியப்படுத்துங்கள். அறிமுகமில்லாத யாருடனும் அவர்கள் செல்லாதிருக்கச் செய்யுங்கள்.
- உங்கள் குழந்தைக்கு செல் போன் வாங்கிக் கொடுப்பதை முடிந்தவரை தவிர்த்து விடுங்கள். அவசியமான காரணங்களுக்காக வாங்கிக் கொடுத்தால், அடிக்கடி போனை உபயோகிப்பதையும், இரகசியமாகப் பேசுவதையும் கண்காணித்து திருத்துங்கள். கணினியையும் உங்கள் மேற்பார்வையில் உபயோகிக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

உங்களது பகுதியில் செயல்பட்டுவரும் **சிவா அறக்கட்டளை**யில் உன்னைப் போன்றவரின் பாதுகாப்புக்காக செயல்பட்டுவரும் **திரு. ரவி**யைத் தொடர்பு **(94898 81089)** கொண்டாலும் தேவையான உதவி உனக்கு கிடைக்கும்.